ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்—தொடர்ச்சி

(ஆ) சென்னை மத்திய சிறை கைதிகள் கோரிக்கைகளுக்காக, நடத்திய உண்ணாவிரதப் போராட்டம் சுமுகமாகத் தீர்க்கப்பட்டது குறித்து சட்ட அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிக்க அனுமதி கோரி உள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அந்த அறிவிப்பினை இப்போது பேரவைக்கு வைப்பார்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் சென்னை மத்தியச் சிறைச்சாலையில் சிறைவாசிகள் 13-3-1995 அன்று உண்ணாவிரதம் இருந்ததற்கான விவர அறிக்கை.

சென்னை மத்தியச் சிறைச்சாலையில் 13-3-1995 அன்று காலையில் 1765 சிறைவாசிகள் சிறையில் இருந்தனர். அவர்களுள் 1,477 பேர் 13-3-1995 அன்று காலை முதல் உணவு உண்ண மறுத்துவிட்டனர். சிறைத் துறைத் துணைத் தலைவர், சிறைத்துறைக் கண்காணிப்பாளர் மற்றும் சிறை அதிகாரிகள் சிறைவாசிகளிடம் விதிமுறைகளைக் கூறி உணவு உண்ணும்படிக் கேட்டுக் கொண்டனர். அதற்குச் சிறைவாசிகள் கீழ்க்கண்ட தங்களுடைய கோரிக்கைகள் பூர்த்தி செய்யப்படும் வரை தாங்கள் உணவு உண்ணாது இருக்கப் போவதாகக் கூறினார்கள்.

1995 மார்ச் 15] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

அவர்கள் கோரிக்கைகள்--(1) புதிதாகக் கட்டப்பட்ட கண்காணிப்புக் கோபுரம் அகற்றப்படவேண்டும்.

(2) நேர்காணல் அறையில் போடப்பட்ட ஃபைபர் கிளாஸ் தடுப்பு, ஃபைபர் கிளாஸ் பார்டிஷன் அகற்றப்படவேண்டும்.

(3) சிறைவாசிகள் சுதந்திரமாக ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்படவேண்டும்.

(4) நேர்காணலின்போது சோதனையே இடுதல் கூடாது.

(5) சமைத்த உணவுப் பொருள்களை சிறையினுள் வெளியே இருந்து அனுமதிக்கவேண்டும்.

(6) சிறைவாசிகளுக்கு உடல் பரிசோதனை செய்தல் கூடாது.

(7) சமைக்காத உணவுப் பொருள்களைச் சிறைக்குள் அனுமதிக்கவேண்டும்.

(8) ஆட்டுக்கறி, பன்றி இறைச்சி, மீன் மற்றும் கருவாடு போன்றவற்றை சிறையில் அனுமதிக்க வேண்டும்.

(9) ஒரே வழக்கில் சம்பந்தப்பட்ட சிறைவாசிகள் ஒரே இடத்தில் பூட்டப்பட வேண்டும்.

(10) குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறைபட்டோருக்கு வாரத்தில் 2 நாட்களுக்குப் பதிலாக 4 நாட்களுக்கு நேர்காணல் அனுமதிக்கப்பட வேண்டும்.

(11) குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறைபட்டோருக்கு தடுப்புச் சுவர் உள்ள நேர்காணல் அறையில் நேர்காணல் காட்டாமல் சிறை அலுவலர் அலுவலகத்தின் உறவினர்களும், சிறைவாசிகளும் அருகருகே அமர்ந்து நேர்காண அனுமதிக்க வேண்டும்.

(12) கடிதங்கள் சென்சார் செய்யப்படாமல் அப்படியே சிறைவாசிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

(13) சிறைவிதிகளின்படி இரவு 9 மணிவரை டி.வி. காட்டலாம். ஆனால், இரவு 9 ½ மணிக்கு மேலும் நள்ளிரவு வரை டி.வி. பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும்.

(14) வாரத்திற்கு ஒரு முறை சினிமா காட்ட வேண்டும்.

(15) நீதிமன்றத்திற்குச் செல்லும்போது உறவினர்களால் கொண்டு வரப்படும் உணவுப் பொருட்கள் சிறைவாசிகளுக்கு வழங்கப்படவேண்டும். அல்லது ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட வேண்டும். மேலும், காவலர் சிறைவாசிகளை அவர்களது வீட்டிற்கு அழைத்துச்செல்ல அனுமதிக்க வேண்டும்.

(16) முக்கியமான சிறைவாசிகளை தனி வழிக் காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.

(17) தடா சிறைவாசிகள், கள்ளக்கடத்தல் தொடர்புடைய சிறைவாசிகள் ஆகியவர்களுடன் மற்ற சிறைவாசிகள் நெருங்கிப் பழக அனுமதிக்க வேண்டும்.

(18) இரவு அடைப்பு மாலை 6½ மணிக்குப் பதிலாக 8 மணிக்கு அடைக்க வேண்டும்.

சிறைவாசிகளுக்கு சிறை அதிகாரிகளால் அறிவுரை கூறப்பட்டதில் 683 சிறைவாசிகள் 13-3-1995 அன்று இரவில் உணவு உட்கொண்டனர். மீதமுள்ள 794 சிறைவாசிகள் திட்டவட்டமாக உணவு உண்ண மறுத்துவிட்டனர். இரவு, சிறைத் துறைத் தலைவர் சிறைக்குச் சென்று சிறைவாசிகளைப் பார்க்க அழைத்தார். ஆனால், சிறைவாசிகள் சிறைத் துறைத் தலைவரைப் பார்க்க மறுத்துவிட்டனர்.

முற்பகல் 11-45

மேலும், இரவு அடைப்புக்கு அறைக்குச் செல்லாமல், அறைக்கு எதிரில் இரவு முழுவதும் படுத்துக் கொண்டனர். ஆரம்பம் முதலே சிறை அதிகாரிகளின் மனதைப் புண்படுத்தி, அவர்களைத் தூண்டுகிற வகையில் மிகமிகக் கேவலமாக, சொல்லத்தகாத இழிமொழிகளால் அதிகாரிகளையும், அவர்களுடைய குடும்பத்தினரையும் திட்டினர். மேலும், சிறை அதிகாரிகளையும், அவர்களுடைய குடும்பத்தினரையும் அழித்துவிடுவதாகப் பயமுறுத்தினார்கள். அதிகாரிகளைத் தூண்டும் வகையில் பேசியபோதிலும் அதிகாரிகள் அமைதியாகவும், அடக்கத்துடனும் சிறைவாசிகளுக்கு அறிவுரை வழங்கி வந்தனர். 14-3-1995, நேற்று, காலை சுமார் 7-30 மணியளவில் சுமார் 200 சிறைவாசிகள் சிறைத் தொகுதியின் கூறை மீது ஏறி அதிகாரிகளையும் அரசையும் மிகமிகக் கேவலமாக விமர்சித்துப் பேசியதுடன் கற்களையும்,

உணவுத் தட்டுகளையும் வீசி எறிந்தனர். இதிலே இரண்டு காவலர்களுக்கு கல்லடிபட்டது. சிறைத்துறைத் தலைவர் அவர்கள் சிறைக்கு வந்து சுமார் 2½ மணிநேரம் சிறைவாசிகளுடன் பேசினார்கள். காவல் துறை அதிகாரிகளும் பாதுகாப்புக்கு வந்திருந்தார்கள். அப்போது சிறைவாசிகள் சரியான நேரத்தில் தங்களை நீதிமன்றங்களுக்கு அனுப்புவதில்லை என்று கூறினார்கள். இனி உரிய நேரத்தில் நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படுவார்கள் என்றும், மற்ற கோரிக்கைகள் எதுவும் அனுமதிப்பதற்கு விதிமுறைகளில் இடமில்லை என்றும் விளக்கிக் கூறி அறிவுரை வழங்கப்பட்டது. அறிவுரையை ஏற்று 14-3-1995 மதியம் 11½ மணி அளவில் அனைத்து சிறைவாசிகளும் உணவு உட்கொண்டனர். தற்போது நிலைமை கட்டுப்பாட்டிற்குள் உள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம். திரு. வி.பி. சந்திரசேகர்.

***திரு. வி.பி. சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு ஆண்டுக்காலம் ஆட்சித் தலைமையேற்று தமிழ்நாடு அமைதிக்கும் நல்லிணக்கத்திற்கும் பெயர் பெற்ற மாநிலம் என்று உருவாக்கிய பெருமைக்குரியவரும், விடிந்த பொழுதெல்லாம் மக்களுக்காக, விட்ட மூச்செல்லாம் ஏழைகளுக்காக என்று வாழ்கிற எங்களது முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் நீடூழி வாழ்க, வாழ்க என்று வணங்கி என் உரையை ஆரம்பிக்கிறேன்.

கவர்னருடைய உரையானது ஆங்கிலத்தில் 29 பக்கம், தமிழில் அதை மொழி பெயர்த்தால் 44 பக்கம், அதைப் படிக்க ஒரு மணி இருபது நிமிடம் ஆகிறது. இவற்றையெல்லாம் படித்ததற்கு பின்னாலும் கூட - நானும் அறிவு தெரிந்த காலத்திலிருந்து பார்க்கிறேன்-- எந்த எதிர்க்கட்சித் தலைவரும், கவர்னர் உரையாகட்டும், வரவு செலவுத் திட்டமாகட்டும், பாராட்டியதாக செய்தியே கிடையாது. இராமாயண நாடகத்தில் இராவணன் வேஷம் போட்டவரிடம் நல்லதை எதிர்பார்ப்பது தப்பு என்பதைத்தான் இதிலேயிருந்து நாம் உணர முடிகிறது.